**மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**முதலாம் தவணைப் பரீட்சை 2024**

| தரம் :- 12(2025) | கிறிஸ்தவம் | நேரம் : 03 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) திருவிவிலியம் என்பதைக் குறிக்கும் இலத்தீன் சொல்.
(1) பைபிள் (2) பிபிளுஸ் (3) வுல்காத்தா (4) டா பிபிலியா (5) பிபிலியா

02) "திரு விவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு உன்னதமான நூலாகும்." காரணம்
(1) அது இறை வாரத்தையை உள்ளடக்கியுள்ளது.
(2) அது தாயைப் போன்றது
(3) அதனை மரியாதையாகப் பயன்படுத்த வேண்டும்.
(4) மனித ஆசிரியர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது.
(5) அது மனிதனை உன்னதமாக கூறுகின்றது.

03) "இணைத் திருமுறை நூல்கள்" என்பதன் பொருள்
(1) இறுதியாக இணைக்கப்பட்டவை
(2) இறை ஏவுதல் பெற்றவை
(3) செப்துவாஜிந்த் பிரதியிலிருந்து பெறப்பட்டவை
(4) மசரோடிக் பிரதிக்கு முன்னர் உள்ளவை
(5) இரணடாவதாக அங்கீகரிக்கப்பட்டவை

04) திருவிவிலியத்தின் பிரதிகளில் ஒன்று அல்லாதது
(1) செப்துவாஜிந்த் (2) இறை வெளிப்பாடு (3) மசரோட்டிக்
(4) வுல்காத்தா (5) வல்கேற்

05) புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மொழி
(1) எபிரேயம் (2) அரமேயம் (3) இலத்தீன் (4) ஆங்கிலம் (5) கிரேக்கம்

06) கி.பி 150ம் ஆண்டளவில் எழுதப்பட்ட "யூதரோடான உரையாடல்" என்னும் நூலில் யூதர்கள் இணைத் திருமறை நூலைத் தவிர்த்து விட்டதாக குற்றம் சாட்டியவர்.
(1) புனித பெனடிற் (2) புனித ஜெரோம்
(3) புனித அம்புறோசியார் (4) புனித கிரகோரி
(5) புனித ஜஸ்டின்



kalvi.lk

07) இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடன் தொடர்புடைய நாடுகளை அழைக்கும் பெயர்களுள் ஒன்று அல்லாதது.

(1) பாலஸ்தீனா (2) கானா (3) இஸ்ராயேல்
(4) வளைகுடா (5) பரிசுத்த பூமி

08) புதிய ஏற்பாட்டின் 21 திருமுகங்களில் ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்படாத திருமுகம்

(1) எபிரேயர் (2) எபேசியர் (3) பிலிப்பியர்
(4) கலாத்தியர் (5) கொலோசேசையர்

09) திருத்தூதர் யோவானால் எழுதப்பட்ட நூல்கள் இவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றது.

(1) யோவானின் இல்லம் (2) யோவானின் ஆலயம்
(3) யோவானின் உடல் (4) யோவானின் உள்ளம்
(5) யோவானின் கரங்கள்

10) கி.மு 1767 இல் எகிப்தைக் கைப்பற்றிய வேற்று இனம்

(1) அமோசிசு (2) கைக்கோசு (3) பாரசீகர் (4) எபிரேயர் (5) மக்கபேயர்

❖ **11-13 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

A- கிழக்குப் பிரதேசப் பாலைவனம்
B- கார்மேல் மலையடிவாரத்திலிருந்து வடக்கே பரந்துள்ளது.
C- யோப்பாவுக்கு தெற்கே ஆரம்பமாகின்றது.
D- யோப்பா தொடக்கம் செசரியா வரை பரந்துள்ளது.
E- சனநெரிசல் உடைய செழுமைமிக்க பிரதேசமாகும்.

11) மேலுள்ள கூற்றுக்களில் பெலிஸ்திய சமவெளிக்கு பொருத்தமாக அமையும் எழுத்து

(1) A (2) B (3) C (4) D (5) E

12) சாரோன் சமவெளியை குறிப்பிடுவதற்கு பொருத்தமான எழுத்து.

(1) D (2) C (3) B (4) A (5) E

13) அக்கோ சமவெளியை வெளிப்படுத்தும் எழுத்துக்களாவன.

(1) A, B (2) C, D (3) B, E (4) D, E (5) B, C

14) வட அரசில் அமைந்துள்ள யாத்திரைத் தலங்களாக அமைவன.

(1) பெத்தெல், சிக்கேம் (2) பெத்தெல், தாண்
(3) கெருசீம், செக்கேம் (4) தான், சீனாாய்
(5) எருசலேம், தான்

15) இஸ்ரயேலின் வரலாற்றில் நீதித் தலைவர்களின் காலத்தை உள்ளடக்கிய ஆண்டுகள் ........................ ஆகும்.

(1) 200 வருடங்கள் (2) 250 வருடங்கள் (3) 100 வருடங்கள்
(4) 175 வருடங்கள் (5) 150 வருடங்கள்



kalvi.lk

16) யூதாவின் இறுதி அரசர்களில் இருவர்

(1) தாவீது, சாலமோன்
(2) யோயாக்கின், செதெக்கியா
(3) சாலமோன், சைரசு
(4) செருபாபேல், யோயாக்கிம்
(5) சைரசு, யோயாகிம்

❖ **17 - 20 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

**A-** காயீனும் ஆபேலும்

**B-** அறிவுரையாக அமைந்துள்ளது.

**C-** பாபேல் கோபுரம்

**D-** மோசேயின் புதுமைகள் மிக அழுத்தமாக வர்ணிக்கப்படுகிறது.

**E-** ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் கூறுதல்

**F-** திருவழிபாடுகளும் குருத்துவ சடங்குகளும் முக்கிய இடம் வகிக்கின்றன.

17) குருக்கள் மரபை வெளிப்படுத்தும் எழுத்து.

(1) B (2) C (3) A (4) F (5) D

18) இணைச்சட்ட மரபின் இலக்கியப் பண்புகளில் ஒன்றாக அமையும் எழுத்து.

(1) F (2) D (3) E (4) B (5) A

19) யாவே மரபின் இலக்கியப் பண்புக்கு எடுத்துக்காட்டான திருவிவிலியப் பகுதிகளை குறிக்கும் எழுத்து.

(1) A, C (2) B, C (3) D, E (4) D, F (5) A, F

20) எலோகிம் மரபின் இலக்கியப் பண்பை குறிக்கும் எழுத்து

(1) A (2) B (3) D (4) E (5) F

($20 \times 01 = 20$ புள்ளிகள்)

## பகுதி - II

❖ **பகுதி 'அ' விலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 'ஆ' விலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்தெடுத்து நான்கு வினாக்களிற்கு விடை தருக.**

### 'அ'

01) (I) பலஸ்தீனா தேசத்தை சிறப்பித்து அழைக்கும் இரண்டு பெயர்களை எழுதுக.

(II) பலஸ்தீனா தேசம் இரண்டாகப் பிளவுபட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

(III) சாலமோன் அரசன் காலத்தில் பொருளாதார முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்று எழுதுக.

(IV) நீதித்தலைவர்களிடம் காணப்பட்ட சிறப்பான செயற்பாடுகளில் இன்றைய நாட்டின் தலைவர்கள் செய்யக் கூடிய செயல்கள் நான்கினை விளக்குக.

($2 + 4 + 6 + 8 = 20$ புள்ளிகள்)



kalvi.lk

02) (I) ஐந்நூலுக்கு கூறப்படும் வேறுபெயர்கள் இரண்டு எழுதுக.

(II) ஐந்நூலில் காணப்படும் முக்கியமான மறைக்கருத்துக்கள் இரண்டினை எழுதுக.

(III) யாவே மரபின் பண்புகள் மூன்றினை எழுதுக.

(IV) ஓய்வு நாளை (ஞாயிறு) தூயதாக கடைப்பிடி என்பதற்கமைவாக நீர் செய்யக்கூடிய செயற்பாடுகள் நான்கினை விளக்குக.

($2 + 4 + 6 + 8 = 20$ புள்ளிகள்)

03) (I) பத்துப் பெருந்துன்பங்களில் முதல் இரண்டு துன்பங்களை எழுதுக.

(II) பாலைவனப் பயணத்தின் போது இஸ்ரயேல் மக்கள் மோசேயுடன் முரண்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.

(III) மோசே இறைவனிடம் தமது அழைப்பை மறுத்த சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.

(IV) சிறப்பான விடுதலைப்பயண நிகழ்வின் மூலம் இறை வெளிப்பாட்டைப் பெறும் நாம் இன்றைய சமுதாயத்தில் எவ்வாறு இறைபராமரிப்பை உணருகின்றோம் என்பதை விளக்குக.

($2 + 4 + 6 + 8 = 20$ புள்ளிகள்)

## "ஆ"

04) (I) திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது படைப்புக் கதையினை ஒழுங்கு முறைப்படி விபரிக்குக.

(II) கடவுள் மனிதனுக்கு கொடுத்த சூழல் பாதுகாப்பு பொறுப்பினை நீர் எவ்வாறு செயற்படுத்துவீர் என்பதற்கு ஐந்து செயற்பாடுகள் தந்து விளக்குக.

($10 + 10 = 20$ புள்ளிகள்)

05) (I) தொடக்க நூலின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட பாவத்தின் வளர்ச்சி நிலையை குறிப்பிட்டு அதன் மூலம் கிடைக்கும் செய்திகளையும் விபரிக்குக.

(II) பாவத்திற்கு அடிமையாகி வாழும் இன்றைய இளம் சமூகத்தை விடுவித்துக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்குக.

($10 + 10 = 20$ புள்ளிகள்)

06) (I) ஆபிரகாமின் வாழ்வில் எதிர் நோக்கிய சவால்கள் ஐந்தினை குறிப்பிட்டு விளக்குக.

(II) ஈசாக்கின் வாழ்விலிருந்து உமது வாழ்விற்கு கிடைக்கும் செய்திகள் ஐந்தினை குறிப்பிட்டு விளக்குக.

($10 + 10 = 20$ புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page